**செய்தி வெளியீடு எண் : 064** **நாள்: 10.01.2022**

<u>செய்தி வெளியீடு</u>

**ஈரோடு மாவட்டத்தில் மொத்தம் ரூ.355.26 கோடி மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (10.1.2022) தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக ஈரோடு மாவட்டத்தில் 104 கோடியே 81 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 66 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, 45 கோடியே 15 இலட்சத்து 43 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 365 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 40,095 பயனாளிகளுக்கு 209 கோடியே 76 இலட்சத்து 71 ஆயிரம் ரூபாய் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

**<u>முடிவுற்ற திட்டப் பணிகளின் விவரங்கள்</u>**

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் 44 கோடியே 94 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 3 பணிகள், பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் 5 கோடியே 29 இலட்சத்து 39 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 3 பணிகள், வணிகவரி மற்றும் பதிவுத் துறையின் சார்பில் 1 கோடியே 72 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு பணி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் 28 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 4 பணிகள், சமூகநலத் துறையின் சார்பில் 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு பணி, வேளாண்மை – உழவர் நலத்துறையின் சார்பில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு பணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை சார்பில் 4 கோடியே 84 இலட்சத்து 27 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 5 பணிகள், ஊரக வளர்ச்சித் துறை மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் 8 கோடியே 52 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 24 பணிகள், கூட்டுறவுத் துறையின் சார்பில் 5 கோடியே 25 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 22 பணிகள், நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் 3 கோடியே 86 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 2 பணிகள், என மொத்தம் 104 கோடியே 81 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 66 முடிவுற்ற திட்டப்

பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

**<u>அடிக்கல் நாட்டப்பட்டுள்ள புதிய திட்டப் பணிகளின் விவரங்கள்</u>**

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் 37 இலட்சத்து 26 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 3 பணிகள், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை சார்பில் 16 கோடியே 76 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 2 பணிகள், ஊரக வளர்ச்சித் துறை மற்றும் ஊராட்சித் துறை சார்பில் 28 கோடியே 1 இலட்சத்து 82 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 360 பணிகள், என மொத்தம் 45 கோடியே 15 இலட்சத்து 43 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 365 புதிய திட்டப் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

**<u>பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விவரங்கள்</u>**

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் 12,144 பயனாளிகளுக்கு 20 கோடியே 44 இலட்சத்து 82 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும், ஊரக வளர்ச்சித் துறை (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) சார்பில் 10,908 பயனாளிகளுக்கு 77 கோடியே 40 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும், ஊரக வளர்ச்சித் துறை (மகளிர் திட்டம்) சார்பில் 3,000 பயனாளிகளுக்கு 10 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 25 பயனாளிகளுக்கு 1 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும், பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் 476 பயனாளிகளுக்கு 26 இலட்சத்து 6 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில் 156 பயனாளிகளுக்கு 6 கோடியே 5 இலட்சத்து 64 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும், வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் 3 பயனாளிகளுக்கு 4 இலட்சத்து 76 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை சார்பில் 25 பயனாளிகளுக்கு 72 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், தோட்டக்கலைத் துறையின் சார்பில் 369 பயனாளிகளுக்கு 2 கோடியே 25 இலட்சத்து 74 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும், கூட்டுறவுத் துறையின் சார்பில் 3,200 பயனாளிகளுக்கு 38 கோடியே 15 இலட்சத்து 3 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் 79 பயனாளிகளுக்கு 65 இலட்சத்து 1 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும்;

சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் 4,607 பயனாளிகளுக்கு 26 கோடியே 80 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாய்

மதிப்பீட்டிலும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் 20 பயனாளிகளுக்கும், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை சார்பில் 4,054 பயனாளிகளுக்கு 3 கோடியே 89 இலட்சத்து 18 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 63 பயனாளிகளுக்கு 56 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை (சமூக பாதுகாப்புத் திட்டம்) சார்பில் 243 பயனாளிகளுக்கு 6 இலட்சத்து 11 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் கீழ் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறிவழிகாட்டும் மையம் சார்பில் 21 பயனாளிகளுக்கும், தாட்கோ சார்பில் 66 பயனாளிகளுக்கு 88 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும், ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில் 316 பயனாளிகளுக்கு 80 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும், மாவட்ட தொழில் மையம் சார்பில் 11 பயனாளிகளுக்கு 14 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை சார்பில் 309 பயனாளிகளுக்கு 6 கோடியே 5 இலட்சத்து 64 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும், என மொத்தம் 40,095 பயனாளிகளுக்கு 209 கோடியே 76 இலட்சத்து 71 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., ஈரோட்டிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.சு. முத்துசாமி, மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ. சாமிநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. அந்தியூர் ப. செல்வராஜ், திரு.அ. கணேசமூர்த்தி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஏ.ஜி. வெங்கடாசலம், திரு. இ. திருமகன் ஈவெரா, திருமதி சி.கே. சரஸ்வதி, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் தலைவர் திரு. குறிஞ்சி என். சிவகுமார், ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.எச். கிருஷ்ணனுண்ணி, இ.ஆ.ப., ஈரோடு மாவட்ட கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு.. மதுபாலன், இ.ஆ.ப., மாவட்ட ஊராட்சி தலைவர் திருமதி நவமணி கந்தசாமி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

-------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**